செய்தி வெளியீடு எண்: 218 நாள்: 19.04.2017

**இன்று (19.4.2017) மாண்புமிகு பால் மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள், சென்னை மாதவரம் ஆவின் பால் பண்ணை அலுவலகத்தில், பால் மற்றும் பால்பொருட்களை அறிமுகப்படுத்தியும், வெளி மாநிலங்களில் பால்பவுடர் விற்பனை மற்றும் புதிய தயிர் அரை கிலோ பாக்கெட்டுக்களை அறிமுகப்படுத்தி மொத்த விற்பனையாளர்களிடையே ஆற்றிய உரை.**

======

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் கீழ் செயல்பட்டுவரும் பால்பண்ணைத்துறை மற்றும் ஆவின் நிறுவனம் சிறப்பான முறையில் பால் கொள்முதல் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்து வருகின்றது. மேலும் கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையிலும், பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இன்று, மேலும் ஒரு சிறப்பான நிகழ்ச்சியாக மொத்த பால் விற்பனையாளர்கள் ஆய்வுக் கூட்டம், பால் பொருட்கள் வெளி மாநிலங்களில் விற்பனை மற்றும் புதிய தயிர் அறிமுக விழா சிறப்பாக நடைபெற்றது.

**<u>சென்னை மாநகரில் செயல்பாடுகள்</u>**

- சென்னையில் இணையத்தின் மூலம் தினசரி 11.70 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றில் மொத்த விற்பனையாளர்கள் மூலம் விற்பனை 4 இலட்சம் லிட்டர் பாலும், கார்டுதாரர்கள் மூலம் விற்பனை 7.10 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதர நிறுவனங்கள் மற்றும் ரொக்க பால் விற்பனை வாயிலாக 60 ஆயிரம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது.
- 1.1.2000 முதல் பால் மொத்தவிற்பனையாளர்கள் உரிமம் வழங்கப்பட்டு தினசரி விற்பனை 59 ஆயிரம் லிட்டரிலிருந்து, தற்போது 4 இலட்சம் லிட்டராக விற்பனை உயர்ந்துள்ளது. இவற்றினை ஆறு லட்சம் லிட்டர் பால் அளவிற்கு விற்பனை செய்ய பால் மொத்த விற்பனையாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- தற்போது சென்னையில் 62 மொத்த பால்விற்பனையாளர்களும், 10 நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மூலகமாகவும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**<u>பால்பவுடர் விற்பனை</u>**

- தற்போது தமிழ்நாட்டில் மட்டும் அரை கிலோ மற்றும் ஒரு கிலோ அளவில் பால்பவுடர் சராசரியாக மாதம் ஒன்றிற்கு 3 ஆயிரத்து 500 கிலோ விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
- திருவண்ணாமலையில் அமைந்துள்ள பால்பவுடர் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பால்பவுடர் வெளிமாநிலங்களில் சிறப்பான வரவேற்பினை பெற்றுள்ளது. அதன்மூலம் சில்லரை விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டு அதன்மூலம் கிடைக்கபெறும் கூடுதல் வருமானத்தினை கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் இன்று அரை கிலோ, ஒரு கிலோ அளவில் பால்பவுடர் வெளிமாநிலங்களில் விற்பனை துவக்கப்பட்டுள்ளது.
- அதே போன்று, சென்னை மாநகரில் தயிர் 200 மில்லி லிட்டர் பாக்கெட் மற்றும் கப்புகளில் சராசரியாக தினசரி 1000 முதல் 1500 லிட்டர் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விற்பனையை மேலும் உயர்த்துவதற்காக, அரை கிலோ தயிர் ரூபாய் 25 என்ற விலையில் இன்று முதல் விற்பனை அறிமுகப்படுத்தப்படுகிறது.

மேலும் இக்கூட்டத்தில் பங்கு பெற்றுள்ள மொத்த விற்பனையாளர்கள் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் கீழ் செயல்பட்டு வரும் பால் வளத் துறை மேலும் சிறந்த திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஏதுவாக தங்களது அரிய கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**